கொள்ள தலைமைப் பொறியாளர் ஒருவரின் பதவித் தரத்தில் சுற்றுப்புறச் சுகாதாரச் சிறப்பு அதிகாரி ஒருவரை இந்த அரசு நியமித்துள்ளது.

சென்னை மாநகரிலும், மாநகரைச் சுற்றிலும் காற்றுத் தூய்மைக் கேடு ஆவதைத் தடுப்பதற்கான வழி வகைகளை ஆய்வு செய்து, பரிவுரை செய்ய 1971-ல் அரசு, குழு ஒன்றை அமைத்தது. குழுவின் பரிவுரையை தென்னிந்திய ரயில்வே, சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, அரசு போக்குவரத்துத் துறை, இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம், காவல்துறை தொழிற்சாலைகள் தலைமை இன்ஸ்பெக்டர் முதலிய பல்வேறு அதிகாரிகளுக்கு இந்தப் பரிவுரைகள் நிறைவேற்றப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அரசால் அமைக்கப்பட்ட 'நீர்—வடிகாற் தூய்மைப் படுத்தும் குழு' என்ற உயர் அதிகாரக் குழு நீரின் தூய்மைக்கேடு குறித்த பல்வேறு கூறுகள் பற்றி ஆய்வு செய்கிறது. மேலும், இக்குழு, இம் மாநிலத்தில் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு உரிமம் வழங்குவது குறித்து அரசால் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய ஒரு முகவரைப்பாகவும் செயல்படுகிறது. கள ஆய்வுகளைச் செய்து, கசிவுகளை தூய்மைப்படுத்துவதற்கான முறைகளையும், அவற்றை தீங்கற்றவைகளாக மாற்றுவதற்கான பரிவுரைகளையும் இக் குழு செய்கிறது. குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவது குறித்து குடும்பநலத்துறை இயக்குநரால கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(பிற்பகல் 3-20)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: லைக ஒழுங்காக வரட்டும் என்கிறேன். அதற்குள் என்ன தலை மூழ்கியா போய்விட்டது? இல்லையே. உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி, எம்.எல்.சி., அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

"நான்கைந்து நாட்களாக தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு வகுப்பாரைச் சேர்ந்த மாணவர்களை மற்றொரு வகுப்பாரைச் சேர்ந்த மாணவர்கள் வெளியாட்களின் உதவியுடன் பல்கலைக் கழகத்துக்குள்ளும் விடுதிக்குள்ளும் செல்ல முடியாதவாறு தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மாணவர்களை தேர்வு எழுதவும் விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தடுப்பை மீறி உள்ளே மாணவர்கள் சென்றால், அவர்களின் உயிருக்குச் சேதம் விளையும் என்று பயமுறுத்துகின்றார்கள். இதுபற்றி ஒரு பதட்ட நிலையே அங்கு உருவாகியுள்ளது".

இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளின் கீழ் வரும் என்பதை மட்டும் சுருக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: மாண்புமிகு தலைவரவர்களே, என்னால் கொடுக்கப்பட்ட இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் நோக்கம் அங்கு மாணவர்கள் மத்தியிலே ஒரு பயங்கரமான சூழ்நிலை இருக்கின்றது, இந்தச் சூழ்நிலைக்கு என்னென்ன காரணம் என்பதைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டும் என்பதுதான். அதைத் தீர்த்து வைக்க வேண்டும். அரசு முயற்சியெடுத்து அதைத் தடுக்க ஆவன செய்ய வேண்டுமென்பதை விவாதிப்பதற்காகவே இத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றேன். அங்குள்ள நிலைமை இன்னும் மோசமாகாமல், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் அதைக் கொடுத்திருக்கின்றேன். இதைப் பற்றி இன்று காலையிலே கூட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து மாணவர்கள் வந்து என்னிடத்தில் நேரில் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் அந்தப் பல்கலைக் கழகத்துக்கு உள்ளே போக முடியாமல் தடுக்கப்படுகிறோம், மீறிச் சென்றால் அங்கே உயிருக்கே ஆபத்தாக இருக்கும் என்று சொன்னார்கள். தடுத்து நிறுத்துகிறவர்கள் எல்லாம் யார், மாணவர்களா அல்லது மற்றவர்களா அல்லது போலீசா என்று கூட நான் கேட்டேன். "அவர்கள் மாணவர்களல்ல, வெளியாட்கள். அவர்களை அங்குள்ள மாணவர்களுக்கு உதவியாக வரவழைத்து 4, 5 நாட்களாக வைத்துக் கொண்டு இப்படி பயமுறுத்துகிறார்கள். இப்படி அங்கு ஒரு பயங்கரமான சூழ்நிலை இருக்கின்றது. அதை நாங்கள் போலீசுக்குக் கூடத் தெரிவித்தோம். அவர்களும் அதற்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்கவில்லை. நாங்கள் வெளியிலே இருந்து கொண்டிருக்கின்றோம். இன்னும் ஒரு வாரத்தில் பரீட்சை எழுத வேண்டும்" என்று சொல்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழகத்துக்குள்ளே போக முடியாமல் தடுத்து நிறுத்தி அங்கே ஒரு பயங்கரமான சூழ்நிலையை உண்டு பண்ணியிருக்கின்றார்கள். இதையெல்லாம் இன்று காலையிலே என்னிடத்திலே வந்து சொன்னார்கள். அவர்களிடத்திலிருந்து அவர்களுடைய கருத்துக்களை, அவர்களுடைய குறைபாடுகளை எல்லாம் எழுதிக் கொடுக்கச் சொல்லி அவர்கள் எழுதிக் கொடுத்ததை முதல்வர் அவர்களிடத்திலே இன்று காலையிலே நான் கொடுக்கச் செய்திருக்கின்றேன். எப்படியோ வேண்டுமென்றே பொதுவாக தமிழகத்திலே இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மிகவும் வேதனையோடு இங்கே கூறிக் கொள்ளுகின்றேன். அண்மையிலே சட்டக் கல்லூரியிலே நடந்த பயங்கரமான சம்பவங்களை அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக்

1975 மார்ச் 29] [திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

கழகத்தில் அதே மாதிரி சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் வெங்கடேஸ்வரா விடுதியிலே, பிரசிடென்சி காலேஜைச் சேர்ந்த விடுதியிலே இப்படி அடிக்கடி பல சச்சரவுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏதோ மாணவர்களிடையிலோ அல்லது அங்கே நடக்கின்ற யூனியன் தேர்தலிலோ வருகின்ற சர்ச்சைகளாக இருந்தாலும்கூடப் பரவாயில்லை, ஆனால் வெளி யிலிருந்து ஆட்கள் சில குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர் களுக்காக அங்கு வந்திருந்துகொண்டு இப்படி விடுதிக்குள் புகுந்து, அடித்து நொறுக்கி நசுக்கியிருக்கிறார்கள். மரணமேற்படக்கூடிய ஆபத் துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இதில் குறிப்பாக பாதிக்கப்படுகின் றவர்கள் வன்னிய மாணவர்கள் என்று தெரிகிறது. இந்த நிலைக்கு என்ன காரணம்? எதற்காக இந்நிலைமை உருவாக்கப்படுகிறது? அதிலும் வன்னியர்கள் பெருவாரியாக வாழ்கின்ற பகுதிகளிலே இவ்வளவு பெரிய பயங்கரமான சூழ்நிலைகளை உண்டு பண்ணுகிறவர்கள் யார் என்பதை நானும் கூட அறிய ஆசைப்படுகிறேன். முதல்வர் அவர்களும் இந்த அரசும் தலையிட்டு இவைகளையெல்லாம் நல்ல முறையிலே சீர்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. இதை மிகைப்படுத்தி இதிலிருந்து ஓர் அரசியல் லாபத்தை நான் அடைய விரும்பவில்லை. நான் கிளர்ச்சி செய்தோ, மக்களை பல தொல்லைகளுக்கு ஆளாக்கியோ, இளைஞர்களைத் துன்பத்திற்கு ஆளாக்கியோ லாபம் அடைய வேண்டுமென் பதற்காக எப்போதும் முயற்சித்ததேயில்லை. அப்படி வருகின்றவர்களை யெல்லாம்கூட நான் கண்டித்துத் திரும்பிப் போகச் சொல்லி, அங்குள்ள வர்களை வைத்தே அந்த மாதிரி விஷயங்களையெல்லாம் நல்ல மாதிரியாக முடித்து வைத்திருக்கின்றேன். இப்பொழுது தமிழகத்திலே இது கட்டுக்கடங்காமல் போன ஒரு நிலவரமாக இருக்கின்றது. குறிப்பாக சென்னை சட்டக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், வெங்கடேஸ்வரா ஹாஸ்டலிலும் இந்த மாதிரி நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையெல்லாம் எனக்குக் கொஞ்சம் விவர மாகவே தெரியும். இதில் யார் யார் தலையிடுகிறார்கள், யார் யார் சொல்லுகிறார்கள், யார் யார் செய்கிறார்கள், யார் யார் உதவி பண்ணு கிறார்கள், இந்த நிலைமைகளை எல்லாம் எதற்காக உருவாக்குகின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த நிலைமை இன்னும் மோசமாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். எப்படியாகிலும் தமிழக அரசு இதில் தலையிட்டு சுபிட்ச மான ஒரு நிலைமையை அங்கே கொண்டு வர வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளே தவிர, இதை ஏதோ ஒரு கிளர்ச்சிக்காகச் சொல்லவில்லை. ஆனால் தமிழகத்திலே வன்னியர் பெருவாரியாக வாழு கின்ற பகுதியிலே இந்தச் சூழ்நிலைகளை உருவாக்கினால், அதன் பின் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என்பதை நான் வேதனையோடு கூறிக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் இங்கே கொண்டு வந்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறினார் கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிக்கடி ஏதேனும் ஒரு

காரணத்தை சாக்காகக் கொண்டு இப்படிப்பட்ட மாச்சர்யங்கள் ஏற்பட்டு வருவது வருந்தத்தக்க ஒன்று. மார்ச் மாதம் 18–ஆம் தேதியன்று அங்கே சடுகுடு விளையாட்டுப் போட்டி நடைபெற்ற நேரத்திலே மாண வர்களிடையே மேல் பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்கள் வாழுகின்ற விடுதியைச் சேர்ந்தவர்களுக்கும் பட்டப் படிப்புப் படிக்கின்ற மாணவர்கள் வாழுகின்ற விடுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இடையே ஏதோ தகராறு ஏற்பட்டு, அதிலே பன்னீர்செல்வம் என்ற மாணவரை சிவசாமி என்ற ஒரு மாணவர் தாக்கியிருக்கிறார். அந்த சிவசாமி யார் என்று கேட்டால், ஏற்கெனவே தேர்வில் தோற்றுப் போய் பரீட்சை எழுதுவதற் காக அங்கே வந்து தங்கியிருக்கிறவர் என்று பின்னால் எனக்குத் தெரிய வந்தது. பிறகு அந்த சிவசாமியும் வேறு சிலரும் சேர்ந்து கொண்டு அன்று இரவே பன்னீர்செல்வம் என்ற அந்த மாணவரைத் தாக்கி யிருக்கிறார்கள். அதோடு மேற்கொண்டு ஒரு ஐந்தாறு பேரையும் தாக்கியிருக்கிறார்கள். மறுநாள் காலையிலே பன்னீர்செல்வம் என்ற மாணவர் சிதம்பரம் காவல் நிலையத்தில் அதைப் பற்றிப் புகார் செய்திருக் கிறார். அந்தப் புகார் அண்ணாமலை நகரினுடைய காவல் துறை யினருக்கு மாற்றப்பட்டு, அது பற்றி விசாரிப்பதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும் அங்கு பதட்ட நிலை ஏற்படாமலிருப்பதற்காக தக்க பாதுகாப்பு வேண்டுமென்று காவல் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்த நிலை ஏற்பட்ட உடனேயே விளையாட்டுப் போட்டிகள் எல்லாம் நிறுத்தப் பட்டு விட்டன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தரின் வேண்டுகோளுக்கு இணங்க, காவல் துறையினர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய சுற்றடைப்புக்கு உள்ளேயே இருந்து பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இப்பொழுது காவல் துறையினர் சுற்றடைப்புக்குள்ளேதான் இருந்து கொண்டு வருகிறார்கள். அப்படி இருந்தாலும், தனிப்பட்ட இடங்களிலே மாணவர்கள் சந்திக்க நேர்ந்தால் கூட, அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன. 23 ஆம் தேதி ராமமூர்த்தி என்ற ஒரு மாணவர் தாக்கப்பட்டதாகப் புகார் கொடுத் திருக்கிறார். அன்று இரவு 1–15 மணிக்கு அவரை குணசேகரன், இளங் கோவன் என்ற இரண்டு மாணவர்கள் தாக்கியதாக ஒரு புகார் கொடுத்

(பிற்பகல் 3-30)

திருக்கிறார். 24–ந்தேதி ராமலிங்கம் என்பவர் சிதம்பரம் காவல் நிலையத்தில் மாலை 7½ மணிக்கு ராஜகோபாலன், கணேசன், குணசேகரன் ஆகியோர் தங்களை சிதம்பரத்தில் தாக்கி விட்டதாக ஒரு புகார் செய்திருக் கிறார். இந்தப் புகார்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, முறைப்படி விசாரணை செய்யப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் சொல்லுகிற மாதிரி அங்கு ஏற்பட்டிருக்கிற மாச்சர் யங்கள் உள்ளபடியே நமக்கெல்லாம் கவலை தருகின்ற ஒன்றாகத்தான் இருக்கின்றது. அதைக் கூடிய விரைவில் பக்குவப்படுத்தி மாணவர்கள் மாணவர்கள் என்ற உணர்வோடு பழகிப் பணியாற்ற வேண்டும் என்கின்ற முயற்சியில் ஈடுபடும்படியாகத்தான் பல்கலைக் கழகத் துணை வேந்தரும், பேராசிரியர்களும், மற்றவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்

அந்த நிலை இல்லாமல் உணர்ச்சி வசப்பட்டு, உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது மாதிரி, பல்வேறு இடங்களில் நிலைமை ஏற்பட்டிருப்பது மிகமிக வருந்துவதற்குரிய ஒன்றுதான். அதை சமுதாயத்தில் இருக்கிறவர்களும், மாணவர்களும், மற்றவர்களும் உணர்ந்து சீர்பட்டாலொழிய, காவல் துறையினர் ஒவ்வொரு இடத்திலும் இருந்து அதைச் செம்மைப்படுத்துவார்கள் என்று நாம் எதிர்பார்க்க இயலாது. அதற்கான வழி வகைகளை நாம் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் சொல்லியதற்கு இரண்டு, மூன்று நாட்களுக்குப் பின்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் காவல் அதிகாரி அவர்களும், ஒரு பதட்ட நிலை இருப்பதனாலும், மாணவர்கள் அஞ்சுவதனாலும், தக்க பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது பரீட்சை எழுதுவதற்காக விடுமுறை விடப்பட்டிருக்கிறது. விடுமுறைக்குப் பலர் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். இப்போது அங்கே அமைதியான சூழ்நிலை இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் என்ன பாதுகாப்பு தந்தாலும், எங்கேயாவது இரண்டொருவர் தனியாகச் சந்திக்கின்ற நேரத்தில் இந்த மாச்சரியத்தின் அடிப்படையிலே ஒருவரையொருவர் அடிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடுமேயானால், பிறகு அதை விசாரித்து தண்டிக்க வேண்டிய நிலைமை வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களும் காவல் துறை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னணியில் யாராவது இருந்தாலும் கூட, கட்டாயம் அவர்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டும், தண்டிக்கப்பட வேண்டும். அதற்கான முழு முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டும். இது வேறு பல கல்லூரிகளுக்கும் பரவாமல் தடுக்க வேண்டும் என்பதைக் கடுமையாக மாண்புமிகு முதலமைச்சரவர்களும் இன்று காலையில் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னாலும் கூட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொலைபேசியின் மூலம் சொல்லும் போது, இதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். தக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. என்றாலும் கூட மாணவர்கள் நிலைமையை உணர வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். இரு பிரிவாகப் பிரிந்தால், மாச்சரியங்களுக்கு இடமில்லாமல் இருக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். பல்கலைக் கழகத் துணை வேந்தரை இன்று காலையிலும் கேட்டோம். ஓரளவுக்கு இருக்கிறது. நாங்கள் சமாதானப்படுத்திக் கொண்டு வருகிறோம் என்று குறிப்பிட்டார்கள். பரீட்சை எழுதுகிறவர்களும், மற்றவர்களும், மாணவர்களும் தனிப்பட்ட முறையிலே அச்சப்படத்தக்க அளவிலே நிலைமை இருக்குமேயானால், முன்கூட்டியே காவல் துறையினருக்குத் தெரிவிக்கலாம். அப்படித் தெரிவித்தால், அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாதுகாப்புத் தரப்படும். யாரையாவது கொண்டு வந்து வைத்துக்கொண்டு யாராவது தாக்குவார்களேயானால், அவர்கள் காவல் துறையினரிடத்திலே தக்க பாதுகாப்புத் தர வேண்டுமென்று வந்தால், அதற்கான பாதுகாப்பைத் தரவேண்டுமென்று காவல் துறையினருக்குச் சொல்லியிருக்கிறோம். இந்த ஏற்பாடுகளெல்லாம் ஓரளவு சுமுக சூழ்நிலையை ஏற்படுத்துமென்று கருதுகிறோம். இது மட்டுமல்லாமல் சிதம்பரம் நகரத்திலிருக்கும் பெரியவர்களும் ஒரு சமாதான நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில்

ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர் அவர்கள் காலையிலே குறிப்பிட்டார்கள்.

இந்த முயற்சிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அரசு தக்க முயற்சிகள் எடுத்து வருகிறது. இதைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறது. பெரியவர்களும், மற்றவர்களும் கூட இந்த வகையில் ஈடுபட வேண்டும். திரு. இராமசாமி படையாச்சி அவர்களும் இந்த நிலையெல்லாம் வராமல் இருப்பதற்கு அவர்களாலான உதவியைச் செய்து வருகிறார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லியது போல, அறிவுரைகளை வழங்கிக் கொண்டுதான் வருகிறார்கள். என்றாலும் கூட இந்த மாச்சரியங்கள் நாம் இல்லாத இடங்களிலிருந்து வந்து சேர்ந்து விடுகின்றன. அதைத் தவிர்ப்பதற்கு பெரியவர்களும் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசு கண்காணிப்பாக இருந்து முறைப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற தன்மையை எடுத்துக் கூறுகிறேன். அதற்கான நிலைமைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமும், மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாகவும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறி இதற்கு மேல் இதை விவாதித்து முடிவு காணவேண்டிய நிலை இல்லாத காரணத்தால், ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: அமைச்சரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ மாணவர்கள் அவர்களுக்குள்ளே சண்டையிடுவதாக இல்லை. ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிராக வெளி மாவட்டங்களிலிருந்து 100, 200 பேர்கள் அங்கு வந்து, 4, 5 நாட்கள் தங்கி இப்படி ஒரு பயங்கரமான நிலைமையை உண்டு பண்ணியிருக்கிறார்கள். காலையில் 5 மாணவர்கள் அண்ணாமலை சர்வகலாசாலையிலிருந்து வந்து என்னிடத்திலே இதைச் சொன்னார்கள். அவர்களெல்லாம் எங்கெங்கு தங்கியிருக்கிறார்கள் என்று கூட நான் கேட்டேன். சிதம்பரத்திலே பேலஸ் ஹோட்டல் என்ற ஹோட்டலிலே தங்கியிருக்கிறார்கள். இன்னும் சிலர் ஒரு ரைஸ் மில்லிலே தங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அங்கு பொதுவாக சாப்பாடு போன்ற பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அங்கே ஏதோ ஒரு பெரிய "ரிசர்வ் ஆர்ம்ட் போலீஸ்" மாதிரி வைத்திருக்கிறார்கள் என்று காலையில் வந்தவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் தான் இதனைச் செய்திருக்கிறது என்று நான் சொல்ல வில்லை. நடத்து அரசாங்கத்தின் சக்திக்கு அப்பால் ஒரு சக்தி இருந்து கொண்டு இந்த மாநிலத்திலே குழப்பத்தையும், பயங்கரத்தையும் உண்டு பண்ணுகிறது என்பதுதான் எனக்குத் திரும்பத் திரும்ப வேதனை தருவதாக இருக்கிறது. ஆனால் அங்கு இருக்கிறவர்களைக்கொண்டு விசாரிக்கச் சொல்கிறோம், கலெக்டரைக் கொண்டு விசாரிக்கச் சொல்கிறோம், போலீஸ் அதிகாரியைக் கொண்டு விசாரிக்கச் சொல்லுகிறோம் என்று சொன்னால், அங்கிருக்கின்ற இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களே இந்தக் கலகத்திற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு இருக்கின்ற "டெபுடி சூபரிண்டெண்ட்" "இது என்ன வன்னியர்கள்

கோட்டையா ? உங்கள் இஷ்டப்படி செய்யலாமா ?" என்று ஏதோ அவதாரித் தனமாகப் பேசுவதாகச் சொன்னுர்கள். இதையெல்லாம் அரசாங்கம் மனத்தில்கொண்டு, எதிர்காலததில் இந்த மாதிரி ஒரு தவருன எண்ணத்தோடு ஒரு பயங்கரமான சூழ்நிலை இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய பெருத்த அவா என்பதை மீண்டும் கூறிக் கொண்டு, அரசாங்கததினுடைய முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலைவரவர்களே, அப்படி வெளி மாவட்டத்திலிருந்து யாராவது வெளியார்கள் கொண்டுவரப்பட்டு இந்தக் கலவரத்திலே ஈடுபடுத்தப்படுவார்களேயானுல், அது பற்றியும் விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரிகளைப்பற்றிச் சொன்னுர்கள். அதிகாரிகள் கலவரத்தை அடக்குவதற்கும், அமைதியை அமைதிப்படுத்துவதற்கும், கலகங்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டிப்பதற்கும் உதவிகரமாக இருக்க வேண்டியவர்களே யல்லாமல், கலகத்திற்கு உதவி செய்யக் கூடியவர்கள் அல்லர். அப்படி யாராவது தவருக ஈடுபடுவார்களேயானுல், அது பற்றி விசாரித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். இப்படிப்பட்ட விவாதங்களின் மூலம், நம்முடைய தமிழகத்திலே ஜாதிப் பூசல்கள், வகுப்புப் பூசல்கள் ஓய்ந்திருக்கின்ற சூழ்நிலையில், நாம் அவைகளுக்கு நம்மை அறியாமல் துளியும் இடம் கொடுத்துவிடக் கூடாது என்று மாத்திரம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இன்னுடைய கோட்டையா என்று யாரோ கேட்டார்கள் என்று சொன்னுர்கள். அதே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சென்ற ஆண்டு நடைபெற்ற சம்பவத்தில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்டவர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். கொலை செய்ததாகக் குற்றம் சாற்றப்பட்டு தண்டிக்கப்பட்டவரும் அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. ஆகவே, மிகுந்த எச்சரிக்கையாக நாம் நம்முடைய பேச்சுக்களையும், எழுத்துக்களையும், நடவடிக்கைகளையும் அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும் எந்தக் கலவரத்தையும் அரசு பார்த்துக் கொண்டிருக்காது. உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோரின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என் இசைவை மறுக்கிறேன்.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கொஞ்சம் உட்காருங்களேன். என்ன படித்துக்கொண்டிருக்கிருர்கள் என்று கேளுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அன்ருட நிர்வாகத்தில் நடக்கிற தவறுகளைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுக்கிறோம். கொடுக்கும்போது நீங்கள் வந்து அன்றைக்குப் பேசுங்கள் என்று துரத்தியடிக்கிறர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பேசிக்கொண்டே இருக்கும் போது குறுக்கே வந்தால் எப்படி ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அன்ருட நடவடிக்கைகளைப் பற்றிய விஷயங்களுக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பது தான் நிலை. ஆனால் அவர்கள் அதற்கு மாருகச் சொல்லுகிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இது அன்ருட சம்பவம் இல்லை. இது அப்படி என்று சொல்லி திருப்பியனுப்பிவிடுகிறர்கள். இது மதுரையிலே நடந்த சம்பவம். விவசாயிகளிடத்திலே இது ஒரு பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மூன்று பேரை உள்ளே வைத்து ....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு அறையிலே தலைவர் அவர்களிடத்தில் தந்துவிட்டு, அது அவையில் வராவிட்டால் அறையிலேதான் தலைவரவர்களிடத்திலே கேட்கவேண்டுமேயல்லாமல், அவையிலே எழுந்து, தான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தந்த தாக சொல்லி அதிலே உள்ள விவரங்களைக் கூடுமான வரையிலே சொல்லு வதற்கு முற்படுவதும் சரியல்ல என்பது என்னுடைய கருத்து.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, உறுப்பினர் கேட்பதில் ஒன்றும் தவறில்லை. அவர்களும் அதே மாதிரி அறையில் கேட்டால் நான் பதில் சொல்வேன் என்று சொல்லுவதுதான் வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சொல்லுவதற்குள்ளே தான் சிறு, சிறு என்று கிளம்பி விடுகிறரே.

திரு. கே. ராஜாராம் : நீங்கள் சொல்லப்போகிறீர்கள் என்பது தெரியாமல் அவர் திடீரென்று எழுந்து விட்டார். நீங்கள் முறையாக ஒன்றன்பின் ஒன்ருகச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். இதை அடுத்தார் போல சொல்லுவீர்கள் என்பது அவருக்குத் தெரியவில்லை. அப்படித் தானேயொழிய வேறு ஒன்றும் இல்லை.